1979 மார்ச் 13]

The Hon. THIRU K. NARAYANASWAMI : Sir, I move :— "That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 13 of 1979), as amended, be passed.

Mr. Speaker, Sir, I have also to make one announcement of policy. The suggestion made by the hon. Member Thiru Kandasami, that the Government may be pleased to appoint an Advisory Committee to watch the working of this Act will be considered seriously and earnestly by the Government.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது. சட்டமுன்வடிவு திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

117. பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்த மையச் சமையற் கூடப் பராமரிப்புப் பட்டறையில், பொருள்கள் மேலாளர், டணிப்பொறியாளர் ஆகியப் பதவிகளைத் தேர்வணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக, தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, பணியாளர் அமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர் அமைப்பு—எம்) துறையின் 24-11-1978-ஆம் தேதியிடப் பெற்ற 1310 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

*69. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979).

9-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது